# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 12, 2025 Weekly E-paper ● April 12, 2025





## கோவையில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாடு

பொள்ளாச்சி மா.உமாபதி

## என்ன மங்குனி அமைச்சரே..!

தலையங்கம்

## தமிழ்நாடு போராடியது! தமிழ்நாடு வென்றது!!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஏப்ரல் 12, 2025 Weekly E-paper ●April 12, 2025


## கோவையில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாடு

**பொள்ளாச்சி மா.உமாபதி**

சுயமரியாதை என்பது வெறும் சொல் அல்ல. அது ஒரு நூற்றாண்டுகாலத் தமிழரின் வரலாறு. சுயமரியாதை என்பது தூய தமிழ்ச்சொல் அல்ல என்றாலும் அது தமிழர்களின் மானத் தமிழ்ச்சொல். ஆரியப் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை, அடக்கு முறையை, ஒடுக்கு முறையை, அதிகாரத்தை மீறி வெடித்துக் கிளம்பிய ஒருமாபெரும் சொல் தான் சுயமரியாதை.

சூத்திரனுக்கு எதை கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்று சொன்ன போதும், ஆரியப் பார்ப்பனர் அல்லாத உழைக்கும் தமிழர்கள் எல்லாம் கல்விக்கூடங்களுக்கு வெளியில் நிறுத்தப்பட்ட போதும் அவர்களுக்காக கல்விச்சாலைகளைத் திறந்து அவர்களைப் படிக்க வைத்து ஆளாக்கியது திராவிட இயக்கத்தின் ஆணிவேரான நீதிக்கட்சி.




கல்வி மறுக்கப் பட்டவர்களுக்குக் கல்வியை கொடுத்து வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற சமூக நீதிக் கண்ணோட்டத்தோடு தந்தை பெரியார் அவர்களால் ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் 1925ல் தொடங்கப்பட்டது தான் சுயமரியாதை இயக்கம்.

அந்த இயக்கம் தான் "பால்ய விவாகம்" என்னும் குழந்தைத் திருமணத்தை எதிர்த்துப் போராடியது. அந்த இயக்கம் தான் கைம்பெண் கொடுமைகளை ஒழிக்கப் போராடியது. அந்த இயக்கம் தான் கைம்பெண்களுக்கு மறுமணத்தை வலியுறுத்தியது. அந்த இயக்கம் தான் நடைமுறையில் இருந்த தேவதாசி முறையை ஒழிக்கப் போராடியது. அந்த இயக்கம் தான் இடுப்பில் இழுத்துக் கட்டி கூனிக்குறுகிப் பணிந்து கிடந்த தமிழர்களைத் தோளில் துண்டு அணிந்து நிமிர்ந்து நடக்க வைத்தது. அந்த இயக்கம் தான் பட்டியல் இனமக்களை "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று கோவிலுக்குள் அனுமதிக்காமல் தூர இருந்து கடவுளை வழிபடச் சொன்ன சனாதனத்தை வீழ்த்தி அவர்களைக் கோவிலுக்குள் அழைத்துச் சென்றது.

தாலி என்பது பெண் அடிமைச் சின்னம், அதை அணியக்கூடாது என்று சொன்னதும் சுயமரியாதை தான். அதே சமயம் திருமண உரிமை மறுக்கப்பட்ட தேவதாசி குலத்தில் பிறந்த குஞ்சிதத்திற்கும் அவர் தங்கை காந்தம்மா அவர்களுக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றாலும் அவர்களுக்குத் தாலியை கட்டச் சொன்னதும் சுயமரியாதை தான்.

சாதி ஒழிப்பையும் பெண் அடிமைத்தன ஒழிப்பையும் முன்னிறுத்தி ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன் போராடியது சுயமரியாதை இயக்கம். அந்த சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவினை எந்தக் கோவையில் முதன்முதலாக பார்ப்பனர் அல்லாதார் மாநாடு நடைபெற்றதோ அதே கோவையில் இப்போது திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்தவுள்ளது.

இந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் தந்தை பெரியார் என்னென்ன இலட்சியங்களைக் கொண்டிருந்தாரோ அவற்றைக் கடந்த அறுபது ஆண்டுகளில் நிறைவேற்றி வைத்திருப்பது திராவிட முன்னேற்றக் கழகம்.

இப்போது மக்களுக்காகப் பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் அரசுக்குத் தரவேண்டிய ஜிஎஸ்டி பங்குத் தொகைகளைத் தராமல் இழுத்தடித்தும், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஆளுநர் மூலம் கிடப்பில் போட்டும் தடைகளை ஏற்படுத்தி வரும் ஒன்றிய அரசின் சதித்திட்டங்களை முறியடித்து வெற்றிப்பாதையில் செல்கிறது தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

தனிமனிதரின் சுயமரியாதை காப்பது மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் சுயமரியாதையையும் காக்க இரு மொழிக் கொள்கையில் உறுதியாக இருப்பதும் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்காக குரல் கொடுப்பதும் திராவிட

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## 14 ஏப்ரல் – அண்ணலின் 135 ஆம் பிறந்தநாள்









### முன்பக்கத் தொடர்ச்சி...

மாடல் அரசின் தனித்தன்மையாகும்.

தொகுதி மறு சீரமைப்பு என்கின்ற பெயரில் இந்தி பேசும் மாநிலங்களுக்குப் பெருமளவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை கூட்டி இந்தி பேசாத மாநிலங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை மட்டுப் படுத்தி வைத்து தங்கள் வஞ்சக சதித்திட்டங்களை நிறைவேற்றத் துடிக்கும் ஆர்எஸ்எஸ் பாஜக அரசைத் துணிவுடன் எதிர்த்து நின்று அதற்காகப் பெரும் படை வரிசை ஒன்றை அமைத்து சுயமரியாதை காத்து வருகிறது தளபதி மு.க.ஸ்டாலின் அரசு.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைக் கிடப்பில் போட்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஆளுநர் ஆர் எஸ் எஸ் ரவியின் சதித்திட்டங்களை மான உணர்வுடன் சட்ட ரீதியாகப் போராடி உச்சநீதிமன்றத்தில் வெற்றி பெற்று தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள அனைத்து மாநிலங்களின் சுயமரியாதையை மீட்டெடுத்துள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளுக்குத் துணை நிற்போம், வலு சேர்ப்போம் .என்கின்ற விதத்தில் தான் கோவையில் சுய மரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாடு நடைபெற உள்ளது.

அந்த மாநாட்டினை பெண்ணிய போராளி திமுக துணை பொதுச் செயலாளர் கவிஞர் கனிமொழி கருணாநிதி திறந்து வைக்கிறார். மாநாட்டின் நிறைவுரையை சனாதனத்தின் பெரும்பகைவர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிகழ்த்த இருக்கிறார். மாநாட்டின் முதல் அரங்கில் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் திராவிட விடுதலைக் கட்சி தலைவர் மானமிகு கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராம கிருட்டிணன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் புதிய குரல் அமைப்பின் தலைவர் தோழர் ஓவியா ஆகியோர் பங்கேற்பது மிகப்பெரும் சிறப்பாகும்.

மாணவர் அரங்கு, இளைஞர் அரங்கு, அரசியல் அரங்கு, கவியரங்கு, யூடியூப் இணையதளப் போராளிகளின் நையாண்டி நிகழ்சிகளுடன், இலக்கிய, அரசியல் ஆளுமைகள் சிறப்புரையாற்ற உள்ளனர்.

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம். ●

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## என்ன மங்குனி அமைச்சரே..!

சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவர் பதவி என்பது பேரவைத் துணைத் தலைவரின் பதவிக்குச் சமமானது. அந்தப் பதவியின் கண்ணியத்தைப் பேணும் வகையில் எதிர்கட்சித் தலைவரின் பேச்சும், செயலும், அறிவார்ந்து குறிப்பாக அரசு வேறு, கட்சி வேறு என்பதைப் புரிந்து பேச வேண்டும்.

நீட் தேர்வை ரத்து செய்யச் சொல்லி பாஜகவுடன் கூட்டணி வைக்க முடியுமா என்று முதல்வர் ஸ்டாலின் கேட்டார், எடப்பாடியிடம். இது கட்சிகள் பற்றிய பிரச்சனை. அதுவும் நீட் மசோதா நாடாளு மன்றத்தில் நிறைவேற வாக்களித்ததே அதிமுகதான்.

உடனே எடப்பாடி நேரடியாகப் பதில் சொல்லாமல், காவிரி நீர்தராத கர்நாடக அரசுக்கும், முல்லைப் பெரியாறு குறித்து கேரள அரசுக்கும் எதிராகத் தீர்மானம் போடமுடியுமா? என்று தன் மேதாவித் தனத்தைக் காட்டியிருக்கிறார் எடப்பாடி.

காவிரி,முல்லைப் பெரியாறு - இரண்டும் வெவ்வேறு மாநிலங்களுக்கு இடையில் உள்ள நீண்டகாலப் பிரச்சனையே ஒழிய அவை கட்சிப் பிரச்சனை அல்ல. இவைகளின் வழக்குகள் நீதிமன்றங்களில் இருக்கின்றன. இவைகூடத் தெரியாமல் எதை, எதனுடன் ஒப்பிட்டுப் பேசவேண்டும் என்பது கூடத் தெரியாமல் பிதற்றுகிறார் அவர்.

அதுபோகட்டும். கடந்த காலங்களில் பாஜகவுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை, இனி பாஜகவுடன் கூட்டணி அமைக்க மாட்டேன் என்று வீரவசனம் பேசினார் அவர்.

சில நாட்களுக்கு முன்னர் டில்லி சென்று, கார்மாறி - கார்மாறி முக்காடிட்டு அமித்ஷாவைச் சந்தித்தார் எடப்பாடி, கூட்டணிக்காக. இன்று சென்னை வந்துள்ள அமித்ஷாவைச் சந்தித்துக் கூட்டணியை உறுதிசெய்யக் காத்துக்கிடக்கிறார் அவர். அது அவர்களின் தனிப்பட்ட கட்சிப் பிரச்சனைதான். ஆனாலும் அவைகளில் ஒரு நேர்மை, நாணயம் இருக்கவேண்டும்.

நிறம் மாறும் பச்சோந்தியைப் போல இருப்பதும், பேசுவதும், செயல்படுவதும் அரசியல் தலைமைத்துவப் பண்பாக இருக்க முடியாது.

அரசியலில் பெரிய சாணக்கியன் என்று பாஜக மற்றும் ஊடகங்களால் தூக்கி வைத்துப் பேசப்பட்ட அமித்ஷாவின் அரசியல் சாணக்கியம், தமிழ்நாட்டுத் தந்தையின் கைத்தடியின் முன்னால் நிற்க முடியாது என்பது, எடப்பாடிக்குப் புரியவில்லையே!

"என்ன மங்குனி அமைச்சரே.." என்பார் வடிவேலு ஒரு திரைப்படத்தில். ஏனோ அது இப்போது நினைவுக்கு வருகிறது.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



மதுரை மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டு விளக்கத் தெருமுனைக் கூட்டம் 10-04-2025 அன்று மாலை சொக்கலிங்க நகர் முக்கிய வீதியில் மாவட்ட துணைச் செயலாளர் சண்முகம் முருகன் தலைமையில் பேரவை பொறுப்பாளர்கள் கருப்பையா, சந்திரன், தம்பி பிரபு, ஸ்டுடியோ சரவணன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அமர்நாத், மாநில அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம், துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து, தி.மு.க தலைமைக் கழக சொற்பொழிவாளர் போடி காமராஜ், பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தின் மாநிலத் தலைவர் முனைவர் வா.நேரு ஆகியோர் உட்பட பேரவைத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு போராடியது ! தமிழ்நாடு வென்றது !!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

இராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளன் விடுதலை, அமைச்சர் பொன்முடி பதவிப் பிரமாணம் எனத் தொடர்ச்சியாக உச்சநீதிமன்றத்தின் கண்டனங்களை பெற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு அரசு தொடர்ந்த சட்ட முன்வடிவுகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பின் மூலம் பலத்த கண்டனத்திற்கு ஆளாகி உள்ளார்.

தமிழ்நாடு அரசு இரண்டாம் முறையாக அனுப்பிய பத்து சட்ட முன்வடிவுகளைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநரின் நடவடிக்கையை ரத்து செய்ததுடன், இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 142 இல் அளிக்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி அந்தப்பத்து சட்ட முன்வடிவுகளுக்கும் உச்சநீதிமன்றம் அனுமதி அளித்து உள்ளது.

அத்துடன் அவ்வழக்கில் தமிழ்நாடு அரசு வேண்டியபடி சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க "ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள்" என்ற காலவரையறையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வரை இந்திய அரசியலமைப்பு சட்டம் "As Soon as Possible" என்று அளித்த சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்திச் சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதை "As Late as Possible" எனத்தாமதித்துக் கொண்டிருந்த ஆர்.என்.ரவி போன்ற ஆளுநர்களுக்கு இதன் மூலம் கடிவாளம் போடப்பட்டுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை தங்கள் விருப்பத்திற்கேற்ப கலைக்க பரிந்துரை செய்து கொண்டு இருந்த ஆளுநர்களை "S. R. Bommai vs Union of India" வழக்கின் தீர்ப்பு கட்டுப்படுத்தியதோ அதைப் போல சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் "The State of TamilNadu vs The Governor of TamilNadu" வழக்கின் தீர்ப்பு இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வழி காட்டும் தீர்ப்பாக அமைந்துள்ளது.



உச்சநீதிமன்றம் தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி

**ஒப்புதல் வழங்கிய 10 மசோதாக்கள் !**

- தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2020
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதா - 2020
- தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் திருத்த சட்ட மசோதா - 2022
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா - 2022
- தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா - 2022
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2022
- தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் இரண்டாவது திருத்த சட்ட மசோதா - 2022
- தமிழ் பல்கலைக்கழக இரண்டாவது திருத்த சட்ட மசோதா - 2022
- தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2023
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதா - 2023

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசின் வாதம் முழுமையாக ஏற்கப்பட்டதுடன், ஆளுநரின் சார்பாக வாதிட்ட ஒன்றிய அரசின் தலைமை வழக்கறிஞர் முன் வைத்த வாதம் முற்றிலுமாக நிராகரிக்கப் பட்டுள்ளது. எனவே இந்த தீர்ப்பு ஆளுநருக்குக் கிடைத்தத் தோல்வி என்பதைத் தாண்டி ஒன்றிய அரசுக்கும், உள்துறை அமைச்சகத்துக்கும் கிடைத்தத் தோல்வியாகக் கருதப்படுகிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் மாநில சுயாட்சிக்காக அமைக்கப்பட்ட நீதிபதி ராஜமன்னார் ஆணையத்தின் அறிக்கையில் " ஆளுநர் ஒன்றிய அரசின் முகவராக இல்லாமல் அரசியலமைப்பின் அடிப்படையில் மாநில அரசின் ஆலோசனைப்படி பணியாற்ற வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வரிகளுக்கு இந்த தீர்ப்பின் மூலம் சட்ட அங்கீகாரத்தை பெற்றுத் தந்திருக்கிறார் திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாடு போராடியது ! தமிழ்நாடு வென்றது!!

## ‘பெரியாரின் வேலைத் திட்டம்’



பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கம், மேலாண்மை இந்த மண்ணில் இருந்து போய்விடக் கூடாது என்பதற்காக பெரியாரை எதிர்த்தார்கள்.

சத்தியமூர்த்தி அய்யர் காலம் தொடங்கி இன்றைய குருமூர்த்தி வரை பார்ப்பனர்கள் பெரியாரை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் விமர்சனம் செய்வார்கள்.

'எள்ளு காயலாம், ஏன் எலிப் புழுக்கை காயுது' என்பதுபோல், பார்ப்பனர் அல்லாதாரில் உள்ள சில எடுபிடிகள் அவர்கள் போடும் எலும்பிற்காக பெரியாரை விமர்சிக்கிறார்கள். அது பெரியாரை, பெரியாரின் சிந்தனையை மேலும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வழிவகை செய்கிறது.




'பெரியாரின் வேலைத் திட்டம்' எனும் இந்த நூல் பெரியாரின் மீது முன்வைக்கப்பட்ட மோசமான விமர்சனத்திற்குப் பதிலாக, அன்றைய அரசியல் சூழலில் நடந்த நிகழ்வுகளின் பார்வையாக, போலிஅரசியலுக்கு மறுப்பாகப் பல செய்திகளைச் சொல்கிறது.

'வெங்காயம்' வெளியீடான இந்நூல் பெற 96009 84294 / 96002 94284 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian